Int. J. Adv. Multidiscip. Res. (2021). 8(6): 232-239

International Journal of Advanced Multidisciplinary Research
ISSN: 2393-8870
www.ijarm.com
(A Peer Reviewed, Referred, Indexed and Open Access Journal)
DOI: 10.22192/ijamr Volume 8, Issue 6 -2021

ஆய்வுக்கட்டுரை

DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2021.08.06.016

# பிரபஞ்சன் படைப்புச் செல்நெறி

**திருமதி சி. கீதா**
துணைப் பேராசிரியர் - தமிழ்த்துறை
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி
புதுச்சேரி - 605 003

## முன்னுரை:

இலக்கியத்தின் சமுதாயப் பயன்பாடு என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். எந்த ஓர் இலக்கியமும் தன்காலச் சமுதாயச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான கருத்துகளை முன்வைக்க வேண்டும்; மனித வாழ்க்கையினை வளர்த்தெடுக்கும் வழியினைக் கூற வேண்டும் என்பர். இலக்கியத்தின் சமுதாயப் பயன்பாடு குறித்த இத்தகைய நிலைப்பாட்டினை உடைய படைப்பாளியாக எழுத்தாளர் பிரபஞ்சன் திகழ்கிறார். தமிழ்ப் படைப்புலகில் தனக்கென தனித்ததொரு அடையாளத்தைக் கொண்ட அவர்தம் படைப்புகளில் வெளிப்படும் சமத்துவச் சமுதாய உருவாக்கத்திற்கான செல்நெறிச் சிந்தனைகளை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

பிரபஞ்சன் புதினங்கள், சிறுகதைத் தொகுப்புகள், கவிதைகள், கட்டுரைகள், நாடகம் ஆகியவற்றைப் படைத்துள்ளார். எனினும் கட்டுரைத் தலைப்பின் நோக்கமும் சுருக்கமும் கருதி, *காதலெனும் ஏணியிலே, கண்ணீரால் காப்போம், மானுடம் வெல்லும்* ஆகிய புதினங்களும், *நேற்று மனிதர்கள், மனிதர்கள் மத்தியில்* ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் மட்டும் இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மனித வாழ்க்கை குறித்த நெடு நோக்கையும் அக்கறையையும் வெளிப்படுத்தும் அவரது படைப்புகள் பெரிதும் சமகாலச் சமுதாயச் சிக்கல்களை மையமிட்டதாகக் காட்சி அளிக்கின்றன. சமத்துவச் சமுதாயத்தினைக் கட்டமைப்பதற்கு ஏதுவான சிந்தனைகளின் சார்பு, இவரது படைப்புகளின் தலையாய செல் நெறியாகத் திகழ்கிறது எனலாம்.

அவரது படைப்புகள் மனித சமுதாயத்திடையே இருக்கும் வேறுபாடுகளைக் களைந்து ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமத்துவச் சமுதாயத்திற்கான நோக்கோடு சாதிய சமத்துவக் கருத்துகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது. அவற்றைக் கீழ்க்காணும் வகையில் பாகுபடுத்தலாம்.

1. ***தமிழ்ச் சமுதாயமும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளும்***
2. ***ஆண்-பெண் உறவும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளும்***
3. ***சமுதாயச் சிக்கல்களும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளும்***

### 1. **தமிழ்ச் சமுதாயமும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளும்**:

இந்தியச் சமுதாயம் முழுமையும் பலவகையான சாதியப் பாகுபாடுகளையும் மத-சமய பேதங்களையும் கொண்டு சிதைந்து கிடப்பதைத் தமிழ்ச் சமுதாயத்தை முன்னிலைப்படுத்தி வருத்தத்தோடு ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார். *கண்ணீரால் காப்போம்* என்னும் புதினத்தில் லவுணான் ஆண்டகையின் மனதில் எழும் எண்ணங்களாக,

*"என்ன ஜனங்கள், ஒரு பாஷை, ஓர் உணர்வு, ஓர் இடம், ஒரு, பூமி, ஒரு தொழில் என்று வாழ்கிறவர்களுக்குள் நான் மேல், நீ கீழ் என்று வித்யாசம் வந்தது எப்படி? எதற்கெடுத்தாலும் சாதி சனாதனம், விதிமுறை என்று சச்சரவிட்டுக் கொள்ளும் இந்தத் தமிழர்களைத் திருத்துவது எங்ஙனம்" (ப.35)*

என்று படைத்துக் காட்டுகிறார். *வெளியேற்றம்* எனும் சிறுகதையிலும் இத்தகையதொரு சூழலைப் படைத்துக் காட்டுகிறார் ஆசிரியர். வராக நதிக்கரையில் இருக்கும் ஆதீனத்தின் 44-வது மடாதிபதியாகப் பட்டம் ஏற்றுக்கொண்ட ஆத்மானந்தர் பாத்திரத்தின் மூலம் சாதியச் சமத்துவக் கருத்துக்களை முன்னிறுத்துகிறார்.

ஒடுக்கப்பட்டவர்களைப் பீடாதிபதிக்கு அருகில் வரவிடுவது மரபுக்கும் தர்மத்துக்கும் விரோதம் என்றும், அவர்கள் சண்டாளர்கள், சாதியில் கடையர். அதனால் குருவின் முக தரிசனம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்றும் அந்தப் பாக்கியம் இந்தப் பிறவியில் கிடைக்கக் கூடாது என்றும் கூறும் ரகுராமய்யரை நோக்கி, ஆத்மானந்தர் வைக்கும் கேள்விகள், பேதங்களைச் சாடும் வகையில் அமைந்துள்ளன. அவை கீழ்க்காணுமாறு அமைகின்றன.

*"மனித வர்க்கத்தில் சண்டாளர்கள், இழிந்தவர்கள் என்று எவராது உண்டா? ஆம் என்றால், அந்தப் படித்தரத்தை உருவாக்கின அதர்மன் யார்?" (மனிதர்கள் மத்தியில் ப.33)*

இவற்றின் மூலம் தமிழ்ச் சமுதாயத்தை முன்னிறுத்தி, சாதிய சமத்துவக் கருத்துகளை ஆசிரியர் முன்வைத்துள்ளதை அறியலாம்.

## 2. ஆண்-பெண் உறவும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளும்:

மனித வாழ்க்கை செம்மையுறுவதற்கு அடிப்படையாக அமைவது ஆண்-பெண் இணைந்த சமுதாய அமைப்பே ஆகும். ஆண் - பெண் உறவுகளின் புரிதல் அடிப்படையில்தான் குடும்ப அமைப்பும், அதன் வளர்ச்சியாகச் சமுதாய அமைப்பும் நிலை பெறுகின்றன. அந்த வகையில் அன்பு நிறைந்த ஆண்-பெண் உறவே சிறப்புடையதாகிறது. இத்தகைய ஆண்-பெண் உறவு, இந்தியச் சூழலில், சாதியத்தின் பெயரால் நிர்ணயிக்கப்படுகின்றது. அது அன்பின் அடிப்படையில் அமைக்கப்படுவதற்குச் சாதியம் தடையாக இருக்கிறது.

சமத்துவச் சமுதாயம் நோக்கிய தனது சித்தாந்தத்தைச் சமுதாயத்திற்கு அடித்தளமாய் அமையும் இத்தகைய ஆண்-பெண் உறவுநிலைகளை வைத்தும் ஆசிரியர் விளக்கியுள்ளார். *நேற்று மனிதர்கள், காதலெனும் ஏணியிலே, வெளியேற்றம்* ஆகிய சிறுகதைகளின் மூலம் இதனை வெளிப்படுத்துகிறார்.

*நேற்று மனிதர்கள்* கதையில் மூர்த்தியின் மாமா மகள் சுமதிக்கும் வீட்டோடு வேலை செய்ய வந்த குப்புசாமிக்கும் இடையே நட்புறவு மலர்கிறது. அவர்களது நெருக்கம் காதல் உறவாகப் பரிணாமம் அடைகிறது. இதனை,

*"சுமதிக்கும் அந்தக் குப்புசாமிக்கும் ஊடே இருந்தது வெறும் நட்பு இல்லை என்று மனசு சொன்னது. அது வேறுவகைப்பட்ட சிநேகம். மனித குலத்தைச் சங்கிலியாக, கண்ணியாகப் பிணைத்திருக்கும் உறவு அது. மனிதரைக் குடும்பமாக, சமூகமாக மாற்றுகிற அடிப்படை உந்துதல்; அது காதல் என்கிற பரவசம்". (ப. 144)*

என்று பெருமைப்படுத்துகிறார் ஆசிரியர். எனினும் சாதி, குல வேறுபாடுகள் அவர்களது உறவைச் சிதைத்து விடுகின்றன. குப்புசாமி உயிருடன் சூளையில் வைத்துக் கொளுத்தப்பட்டதையும், சுமதி கொள்ளிடக் கரையில் உயிருடன் எரிக்கப்பட்டதையும் கதை முடிவு காட்டுகின்றது.

கதைப்போக்கில் சுமதியின் அண்ணன் தனபாலைப் பார்த்து, மூர்த்தி விடுக்கும் கேள்வி, சிந்தனைக்கு உரியதாகவும் சாதியச் சமத்துவத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது.

*"தனபால், மாமாவை விடு! அவர் போன தலைமுறை நாமெல்லாம் இளைஞர்கள், சாதி, குலம் எல்லாம் நாம பார்க்கலாமா?" (ப.145)*

இதில் சாதி, குலம் மத பேதமற்ற சமுதாயத்தினை உருவாக்க விழையும் ஆசிரியர், இளைய சமுதாயத்தை நோக்கி அறைகூவல் விடுப்பதையும் காணமுடிகிறது.

தனபாலின் பதில், சாதிய உணர்வு எவ்வாறு மனிதனை முரடர்களாகவும் அறிவின் துணையிழந்து உணர்ச்சி வயப்படும் அறிவிலிகளாகவும் மாற்றுகிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

*“மூர்த்தி! நீ படிச்சவன். பட்டணம் பக்கம் போய்டுவ, இந்த ஊரோடயும் சனத்தோடயும் நான் தாம்பா வாழ வேண்டியவன். கடைத்தெருவிலே நான் தலை நிமிர்ந்து நடக்க வேண்டாமா? என் முதுகுக்குப் பின்னால் விரல் நீண்டா, அது யாரோட விரலா இருந்தாலும் அதை முறிச்சிப் போட்டாத் தானே நான் ஆம்பிளை” (ப. 145)*

என்ற தனபாலின் இந்த பதிலின் மூலம், கிராமத்துச் சூழல்களில் சாதியம் இன்னும் கோர முகத்தோடே வாழ்ந்து கொண்டிருப்பதையும் அது மக்களின் உணர்ச்சியோடு கலந்திருப்பதையும் ஆசிரியர் புலப்படுத்- துவதையும் அறியலாம்.

*காதலெனும் ஏணியிலே* புதினத்தில் சுமதியின் அம்மா பாத்திரத்தின் மூலம் சாதிய சமத்துவக் கருத்துக்களை வலியுறுத்துகிறார்.

*“சாதி விட்டுச் சாதி கல்யாணம் பண்ணிக்கிட்டா குழந்தை பொறக்காதா? சாதிவிட்டு சாதி கல்யாணம் பண்ணிக்கிறவங்களுக்கு குழந்தை பொறக்காமப் போச்சுன்னா, அது இயற்கைக்கும் ஆண்டவனுக்கும் விரோதம்னு நினைக்கலாம். பிறக்குது அப்படின்னா அது கடவுளுக்குச் சம்மதம்னு தானே அர்த்தம்” (ப. 207)*

இதன் மூலம் சாதி கடந்த திருமண உறவு இயற்கையானதே, ஆண்-பெண் என்ற உறவைச் சாதியம் பிரித்து அழிப்பதே இயற்கைக்கு முரணானது என்ற கருத்தை ஆசிரியர் எடுத்துக் கூறுவதைக் காணலாம்.

*“படபடவென்று கை தட்டினாள் ரேகா. லாரென்ஸ் மேஜையை இடது கையால் தட்டினான்” (ப. 207)*

என்று படைத்துக் காட்டுவதன் மூலம் சாதி - மத பேதங்களைக் கடந்த இளைய சமுதாயம் உருவெடுத்து வருவதையும், அது சமத்துவத்தை நோக்கி வளர்வதையும் படம்பிடித்துக் காட்டுகிறார்.

இத்தகைய சாதியச் சமத்துவத்தை ஏற்படுத்தும் செயல்களே சாதிய ஒழிப்புக்கு வழி வகுக்கும் என்ற சிந்தனையையும் ஆசிரியர் சுமதியின் அம்மாவின் மூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகிறார்.

*“அரிசியோட கல்லைக் கலக்கிறதுதான் கலப்பு. எண்ணெயோட தண்ணியைக் கலக்கறது தான் கலப்பு. ஆணும் - பெண்ணும் சேருவது எப்படிக் கலப்பாகும்? அது இயற்கைதானே.... சாதி கலக்குதுன்னா, சாதி இல்லாமயே போகும்.*

*அது நல்லதுதானே?.... அதுவுமில்லாம நாம பிறக்கும் போதே இன்ன சாதியில பிறக்கணும்னு வேண்டிகிட்டு விரும்பியா பிறந்தோம்?"*

*"இந்துவா, கிறிஸ்துவா, முஸ்லிமா? ரெட்டியாரா, முதலியாரா, பிராமணனா, ஹரிஜனனா பிறக்கணும்னு விரும்பியா பெறக்கரோம்? இதெல்லாம் நம்மேல திணிக்கப்பட்டதுதானே? ஒரு பெண்ணும் ஆணும் நேசிக்கிறதுக்கு இதுகள்லாம் குறுக்கே வரக்கூடாது. இந்தக் கட்டுகள்லாம் அழிஞ்சிபோயி மனுசங்க ஒண்ணி ஆகிறதுதானே நேசம்" (ப.208)*

இந்தச் சிந்தனையின் மூலம் சாதி பேதங்களை நிலைநாட்டும் கட்டுக்கள் உடைந்தால் நேசம் பிறக்கும் என்றும் அதுவே மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்தி மேன்மையுறச் செய்யும் என்ற கருத்தையும் பிரபஞ்சன் நிறுவுவதைக் காணமுடிகிறது.

சாதி ஒழிப்பு குறித்த கருத்துகளை முன்வைத்து, சமத்துவச் சமுதாயம் வளரப் போராடிய அம்பேத்கர், பெரியார் முதலியோரின் சித்தாந்தங்களைப் பின்பற்றி இவர் தனது கொள்கைகளை வகுத்துக்கொண்டு படைப்பதை இதன் மூலம் நாம் உணரலாம்.

கலையும் இலக்கியமும் பிரச்சாரக் கருவிகள்தாம். ஏதேனும் ஒன்றைப் பிரச்சாரம் செய்வதற்கே இவை கண்டறியப்பட்டன என்று கூறும் ஆசிரியர் தனது சாதியச் சமத்துவப் பிரச்சாரத்தை வெளியேற்றம் என்னும் சிறுகதையிலும் படைத்துக் காட்டுகிறார்.

சோமு என்ற ஒடுக்கப்பட்ட சாதி இளைஞனுக்கும் தன் மகள் கோதைக்கும் இடையில் இருக்கும் காதல் உறவை ஏற்க மறுத்த நரசிம்மன் ஆவேசத்தோடு பேசுகிறார்.

*"அவன் என்ன சாதி, நாம் என்ன சாதி சுவாமி?*
*இதெல்லாம் பேச நல்லா இருக்கும்*
*கறிக்கும் ஆகாது" (ப.41)*

என்று கூறுகிறார். நரசிம்மனை நோக்கி ஆத்மானந்தர் கூறும் பதிலில் சாதியச் சமத்துவத்தை வற்புறுத்தும் ஆசிரியரின் சிந்தனைகள் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன.

*"நரசிம்மன் உனக்கும் சோமுக்கும் தெய்வம் ஒன்றுதானே! உம்மைப் படைத்த தெய்வம்தானே அவனையும் படைத்தது. சாதி, மத, இன வித்யாசங்கள் கடவுள் சம்மதம் என்றால் ஒரு சாதி ஆணுக்கும் பெண்ணுக்கும் மட்டும்தானே குழந்தை பிறக்க நேரிடும்? மனிதர் மனிதருடன் சேர்ந்தால் பிள்ளை பிறந்து விடுகிறதே, அப்படி இருக்க எவரும் எவருடனும் சேரலாம் என்றுதானே ஆகிறது. இன்னும்*

*சொன்னால் சோமுவைத்- தானே, மகாத்மா காந்தி கடவுளின் புத்திரன் என்று சொன்னார்?" (பக். 41-42)*

ஆத்மானந்தரின் இக்கருத்து காந்தியின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கையைத் தொட்டு நிற்பதை உணரலாம்.

மேற்கண்ட வகையில் அம்பேத்கர், பெரியார், காந்தி முதலானோரின் சாதி சமத்துவக் கருத்துக்களை முன்னோடியாகக் கொண்டு ஆண்-பெண் உறவின் அடிப்படையில் சாதியச் சமத்துவக் கருத்துக்களை ஆசிரியர் முன்வைக்கிறார்.

### 3. சமுதாயச் சிக்கல்களும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளும்:

படைப்பாளிக்கும் படைப்பிற்கும் இடையிலான உறவினைக் குறிப்பிடும் போது,

*"இலக்கிய ஆசிரியன், தன் துறையின் மீது தான் வகுத்துக் கொண்ட இலட்சியங்களை கொள்கைகளை, சித்தாந்தங்களை ஓரிடத்தில் பதிவு செய்துவிட வேண்டியது கட்டாயம் என்று நான் நினைக்கிறேன்". (ப. 41)*
என்று, *என்னைப்பற்றி* என்று பிரபஞ்சன் கதைகள் தொகுப்பில் வெளிப்படுத்துகிறார். இதன் பின்னணியிலேயே பிரஞ்ச்-இந்திய வரலாற்றினைத் தீட்டிக் காட்டும் நோக்கோடு, தான் படைத்த புதினங்களிலும் சாதியச் சமத்துவச் சிந்தனைகளைப் படைத்துக் காட்டி உள்ளதை விளங்கிக் கொள்ளலாம்.

சாதியச் செயல்பாட்டினால் சமுதாயத்தின் நடைமுறைகளில் தோன்றும் சிக்கல்கள் மூலமாக இக்கருத்துக்களை அவர் முன்வைத்- துள்ளதை அறியமுடிகிறது.

தமிழர்களிடையே இருந்த இடங்கை - வலங்கை சாதிப் பிரிவினையையும் அவற்றின் உரிமைகள், பெருமைகள் தொடர்பாக எழுந்த சிக்கல்களையும் மானுடம் வெல்லும் புதினத்தில் அவர் எடுத்துக் காட்டுகிறார்.

இடங்கை சாதிப் பிரிவைச் சேர்ந்த பத்ராசல செட்டி பல்லக்கில் வந்து கொண்டு இருந்ததைக் கண்ட வலங்கைச் சாதிப் பிரிவைச் சேர்ந்த எல்லப் பிள்ளையும் வீராப் பிள்ளையும் கவர்னர் துரையிடம் புகார் செய்கின்றனர். செட்டி, தன் சாதிக்கு விதிக்கப்பட்டிருந்த வரம்பை மீறி விட்டதாகவும் சமூக விதிப்படி இடங்கை சாதிப் பிரிவைச் சேர்ந்த ஒருத்தர், ஒரு வீதியில் நடப்பதே குற்றமாய் இருக்கத் தன் அடிமைகளைக் கொண்டு ஒருத்தர் பல்லக்கில் ஏறி பவனி வருவது பெரிய குற்றம் என்றும் முறையீடு செய்கின்றனர். இதனைக் கேட்ட கனகராய முதலியார்,

*"துரை பெருமானே! தமிழர்களுக்குள் இருக்கிற நடைமுறை- களில் அதுவும் ஒன்று. சோழ ராஜாக்கள் காலம் முதலாக, இங்குள்ள சாதிகள் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்- பட்டுள்ளன. ஒன்று இடங்கை மற்றது வலங்கை. பிராமணர்கள் மற்றும் மேல்சாதிக்காரர்கள் இதில் சேர்த்தியில்லை. பயிர்த்- தொழில் சம்பந்தம் கொண்டவர்கள் வலங்கையர். வணிகம், கைத்தொழில் சம்பந்தம் கொண்டவர்கள் இடங்கையர். ஒவ்வொரு பிரிவுக்கும் சில அந்தஸ்துகள், தகுதிகள் வரம்புகள் இருக்கின்றன. பிள்ளை வலங்கையர், அவர் இடங்கை வகுப்பைச்சேர்ந்த செட்டியாரின் பெருமைகளையும் உரிமைகளையும் மரபுப்படி ஆட்சேபிக்கிறார்". (பக்.54-55)*

என்று துரைக்கு எடுத்துக் கூறும் விளக்கம், சமுதாய நடைமுறைகளில் சாதியம் செயல்பட்ட தன்மையை விளக்கி நிற்கும். இதற்குப் பதிலாக துரை கூறும் கீழ்க்காணும் கருத்தின் மூலமாகவே ஆசிரியர் தனது சாதியச் சமத்துவச் சிந்தனைகளை முன்வைத்- துள்ளார்.

*"இது என்ன கூத்து? எங்கள் நாட்டிலும் கூட மனிதர்களுக்குள் பிரிவுகள் இருக்கின்றன. பணம் உள்ளவர்கள், இல்லாதவன் என்கிற பிரிவு மட்டுமே அவை. இங்கு சுதேசிகளாகிய உங்களிடத்தில் பணப்பிரிவு தவிர எத்தனை உட்பிரிவுகள்? நீங்கள் எல்லோரும் தமிழ் பேசுகிற மனிதர்கள். சகோதரர்கள் மாதிரி மனிதரகள் ஒவ்வொருவரும் அவர் பாஷை, பண்பாடு எதுவானாலும் சகோதரரே அல்லவா? பிள்ளைக்கும் செட்டிக்கும் என்ன வித்யாசம்? (ப.55)*

இக்கருத்தின் மூலம் பார்வையின் பின்னணியில் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் சாதியக் கேடுகளை ஆசிரியர் சாடுவதையும், சமத்துவச் சிந்தனைகளை முன்வைப்பதையும் அறியலாம்.

மேலும், *கண்ணீரால் காப்போம்* புதினத்தில் பெரியாரின் சுயமரியாதை இயக்கப் போராட்டத்தின் தொடக்க காலப் பின்னணியில் முன்வைக்கப்படும் கருத்துகள் வாயிலாகவும் ஆசிரியரின் சாதியச் சமத்துவச் சிந்தனைகள் வெளிப்பட்டுத் தோன்றுவதை அறியலாம். சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் சிலர் எழுப்பும் கேள்வியாக கல்யாண சுந்தர முதலியார் கூறும் இக்கருத்து கீழ்க்காணும் வகையில் படைக்கப்படுகிறது.

*"பள்ளு, பறை சனங்களும் நீங்கள் என்னடா உசத்தின்னு கேக்கிறதுகள். எல்லார் உடம்பிலும் ஓடுகிற ரத்தம் ஒண்ணுதான் நீ மட்டும் என்ன பன்னிரண்டு மாசமான்னு கேட்கிறதுகள் (ப.269)*

இக்கருத்துக்கள் மூலம் சமுதாய நடைமுறைகளில் தோன்றும் சிக்கல்களை மையமிட்டுச் சாதியச் சமத்துவச் சிந்தனைகளை ஆசிரியர் முன்வைத்துள்ளதையும் விளங்கிக் கொள்ளலாம்.

## நிறைவுரை:

மனிதத்தன்மை இழந்து நேசம் மறந்து பலவகையான பேதங்களுக்கு ஆட்பட்டுச் சிக்கித் தவிக்கும் மனித சமுதாயத்தை ஒரே சமுதாயமாக வாழத்தூண்டும் வகையில் சமத்துவக் கருத்துகளை வலியுறுத்தி உள்ளமையை அறிந்துகொள்ள முடிகிறது.

மேற்கண்ட இக்கருத்துக்கள் மூலம் சமுதாய நடைமுறைகளில் தோன்றும் சிக்கல்களை மையமிட்டு சமூகவியல் பார்வையிலான அவர்தம் படைப்புச் செல்நெறி இயங்குவதை விளங்கிக் கொள்ள முடிகிறது.

## பயன்பட்ட நூல்கள்


1. *பிரபஞ்சன் கதைகள்* (சிறுகதைத் தொகுப்பு), அன்னம் வெளியீடு, சிவகங்கை-1986.
2. *மானுடம் வெல்லும்* (புதினம்), பூஞ்சோலை பதிப்பகம், சென்னை- 1990
3. *மனிதர்கள் மத்தியில்* (சிறுகதைத் தொகுப்பு), காண்டீபம் வெளியீடு, சென்னை-1994.
4. *நேற்று மனிதர்கள்* (சிறுகதைத் தொகுப்பு), கவிதா பப்ளிகேஷன்ஸ், நான்காம் பதிப்பு, சென்னை-1997.
5. *காதலெனும் ஏணியிலே* (புதினம்), கங்கை புத்தக நிலையம், சென்னை-1997.
6. *கண்ணீரால் காப்போம்* (புதினம்), கவிதா பப்ளிகேஷன்ஸ், சென்னை- 1998.



| இந்தக் கட்டுரையை இணையத்தில் அணுகவும் | |
|---|---|
| | இணையதளம்: www.ijarm.com |
| விரைவுப் பதிலளிப்புக் குறியீடு | பொருள்: தமிழ் |
| DOI:10.22192/ijamr.2021.08.06.016 | |

இக்கட்டுரையை எவ்வாறு மேற்கோள் காட்டுவது :
சி. கீதா. (2021). பிரபஞ்சன் படைப்புச் செல்நெறி. Int. J. Adv. Multidiscip. Res. 8(6): 232-239.
DOI: http://dx.doi.org/10.22192/ijamr.2021.08.06.016